உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 31.05.2026 • மலர் 04 • இதழ்: 151 • ஞாயிற்றுக்கிழமை • Edition : Nagercoil • 31.05.2026 • Vol : 04 • Issue : 151 • Page : 4 • Rs. 5/-

# மத்திய மந்திரி சபையில் மாற்றம்?

## கூட்டணி கட்சிகளுக்கு கூடுதல் வாய்ப்பு

டெல்லி, மே. 31

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய மந்திரி சபையில் மாற்றம் ஏற்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மந்திரி சபையில் இடம்பெற்றுள்ள 12 மத்திய மந்திரிகள் நீக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரதமர் மோடி தலைமையில் கடந்த 21ம் தேதி நடைபெற்ற மத்திய மந்திரிசபை கூட்டத்தில் இது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

12 மத்திய மந்திரிகளில் கேபினெட் மந்திரிகளாகவும், இணை மந்திரிகளாகவும் செயல்பட்டு வரும் நிலையில் அவர்களின் மந்திரி பதவி நீக்கப்பட்டு புதியவர்கள் கேபினெட் மந்திரிகளாகவும், இணை மந்திரிகளாகவும் நியமிக்கப்பட உள்ளனர்.

மத்திய மந்திரி சபையில் இடம்பெற்றுள்ள மந்திரிகளில் சிலர் சமீபத்தில் பாஜக மாநில தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, டெல்லி, பஞ்சாப், அரியானா,

திரிபுரா ஆகிய மாநிலங்களுக்கு பாஜக மாநில தலைவர்களாக மந்திரி சபையில் இடம்பெற்றுள்ளவர்கள் நியமிக்கப்பட்டனர். இதையடுத்து, மத்திய மந்திரி சபையில் இருந்து கேபினெட் மந்திரிகள், இணை மந்திரிகள் 10 முதல் 12 பேர் மந்திரிகள் பணியில் இருந்து நீக்கப்பட்டு பாஜககூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளை சேர்ந்தவர்களுக்கு மந்திரி சபையில் இடம் வழங்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

மத்திய மந்திரி சபை அடுத்த மாதம் 15ம் தேதி அல்லது 18ம் தேதி மாற்றம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில் கூட்டணி கட்சிகளான ஐக்கிய ஜனதா தளம், தெலுங்கு தேசம், தேசியவாத காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் மந்திரி சபையில் வாய்ப்பு வழங்கப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், மேல்சபைபதவிகாலம் முடியவுள்ள பல மந்திரிகள் கட்சி பொறுப்புக்கு மாற்றப்பட உள்ளனர். 70 வயதிற்கு மேற்பட்ட மந்திரிகள் மற்றும் சில மேல்சபை எம்.பி.க்கள் ஆகியோர்

இளம் தலைமுறைக்கு வழிவிடும் வகையிலும், மாநில சட்டபை தேர்தல்களை கருத்தில் கொண்டும் மந்திரி சபையில் மாற்றம் கொண்டுவரப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



### தஞ்சாவூர் பெரிய கோவில்

## கோட்டை மதில் சுவரில் தூய்மை பணிகள் மீண்டும் தொடக்கம்



தஞ்சாவூர் மே 31

தஞ்சாவூர் மாவட்ட நிர்வாகத்திற்கும் தொல்லியல் துறைக்கும் இருந்த கருத்து மோதல் முடிவுக்கு வந்ததை தொடர்ந்து பெரியகோவில்கோட்டைமதில்சுவரில் தூய்மைபணியைமீண்டும்தொடங்கியது

தஞ்சாவூர் பெரிய கோயிலை சுற்றியுள்ள அகழியில் தூய்மை பணியை 16ஆம் தேதி தொடங்கி நிறைவடைந்தது. இதனிடையே கோயிலை சுற்றியுள்ள கோட்டைசுவரில்வளர்ந்துள்ளசெடிகள் மரங்களை அகற்றி தூய்மை ப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்ட நிலையில் கட்டுமானம் பாதிக்கப்படுவதாக தொல்லியல் துறையினர் கூறியதால் இப்பணி மே 27ஆம் தேதி நிறுத்தப்பட்டது

இதனால் மாவட்ட நிர்வாகத்திற்கும் இந்திய தொல்லியல் துறைக்கும் கருத்து மோதல் ஏற்பட்டது. இந்நிலையில் பெரியகோவில்அகழியில்தூர்வரப்பட்ட பணியை தஞ்சாவூர் தொகுதிமக்களவை உறுப்பினர் முரசொலி ஆய்வு செய்தார். அப்போது கோட்டை மதில் சுவரில் தூர்வாரும் பணிக்கு இந்திய தொல்லியல் துறையினர் இடையூறாக இருப்பதாக மக்களவை உறுப்பினரிடம் மாவட்ட நிர்வாகத்தினர் முறையிட்டனர்.

இதையடுத்து மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ளும் தூய்மை பணிக்கு எவ்வித இடையூறும் செய்யாமல் மேற்பார்வையிட்டு உரிய ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்கள் வழங்குமாறும், மாவட்ட நிர்வாகம் கட்டுமானங்களை சேதப்படுத்தாமல் தூய்மைப் பணிகளை மேற்கொள்ளுமாறு மக்களவை உறுப்பினர் அறிவுரை வழங்கினார். இதன் மூலம் மாவட்ட நிர்வாகத்திற்கும் தொல்லியல் துறைக்கும் இடையே இருந்து வந்த கருத்து மோதல் முடிவுக்கு வந்தது.

இதைத்தொடர்ந்து பெரிய கோவில் கோட்டை மதில் சுவரில் தூய்மை பணி மீண்டும் தொடங்கியது. இதில் மதில்சுவரில்வளர்ந்துள்ள மரங்கள் செடி,கொடிகளை, மாநகராட்சி பணியாளர்கள் வெட்டி அகற்றி சுத்தம் செய்தனர். இப்பணிகளை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் பார்வையிட்டார்.

அப்போது மாவட்ட வருவாய் அலுவலர்தியாகராஜன்உடன்இருந்தனர்.



## கோவையில் அமைச்சர் வன்னி அரசு ஆய்வு

கோவை மே:31

கோவை மாவட்டம் ஒண்டிப்புதூர், வெள்ளலூர், சுங்கம் மகளிர் விடுதி, பாலசுந்தரம் சாலை கல்லூரி மாணவர் விடுதி, பட்டணம் ஆகிய பகுதிகளில் சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு, கோவை மாவட்ட ஆட்சியர் பவன் குமார் கிரியப்பனவர், சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கிரி பிரசாத் பாலசுந்தரம் சாலையில் உள்ள சமூக நீதி விடுதியில் மாணவர்களுக்கு வழங்கும் உணவினை உணவறிந்து ஆய்வு செய்தனர். உடன் தாட்கோ உயர் அதிகாரிகள், ஆதி திராவிடர் நலப்பிரிவு அதிகாரிகள் மற்றும் இத்துறை சார்ந்த அலுவலகர்கள் கலந்து கொண்டனர்.

## நெல்லை, தென்காசியில் 10 பேர் மீது தொடர் தாக்குதல்; 8 பேர் கைது: காவல்துறை விளக்கம்

திருநெல்வேலி, மே. 31

திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்ட காவல் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பிரம்மதேசம் பகுதியில் நேற்று முன்தினம் (28.5.2026) மணிகண்டன் (வயது 29) என்பவரை இருசக்கர வாகனங்களில் வந்த கும்பல் வழி மறித்து பணம் கேட்டு மிரட்டி, அவரது இடது கை விரலில் காயம் ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்றது. அதே கும்பல், வாகைகுளம் பகுதியில் உள்ள சிற்பக்கலை தொழிற்கூட உரிமையாளர் செல்வகணேசனை மிரட்டி பணம் பறிக்கும் நோக்கத்தில் அங்கு சென்றபோது அவர் இல்லாததால், அங்கிருந்த பொருட்களை சேதப்படுத்தி, அங்கு பணியாற்றிய நபரிடமிருந்து செல்போனை பறித்துக் கொண்டு, அங்கிருந்து தப்பிச் செல்லும் வழியில் சாலையோரமாக நடந்து சென்ற ஒருவரை தாக்கி காயம் ஏற்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து நேற்று (29.5.2026) மாலை தென்காசி மாவட்டம் ஆலங்குளம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நெட்டூர் பகுதியில், முன்விரோதம் தொடர்பான வாய்த்தகராறின் காரணமாக இருசக்கர வாகனங்களில் வந்த அதே கும்பல் 6 பேரை தாக்கி காயம் ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்றது. மேலும் அங்கிருந்து தப்பிச் செல்லும் போது திருநெல்வேலி மாவட்டம் மானூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தெற்குப் பட்டி பகுதியில் அதிவேகமாக சென்ற இருசக்கர வாகனங்களை கண்டித்த நிலையில், சாலையோரத்தில் இருந்தவர்களுடன் ஏற்பட்ட வாய்த்தகராறில் முபாரக்(30) மற்றும் அப்துல்ரஹுமான்(36) ஆகிய 2 பேரை தாக்கி காயம் ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

மேற்கண்ட சம்பவங்கள் தொடர்பாக அம்பாசமுத்திரம், ஆலங்குளம் மற்றும் மானூர் காவல் நிலையங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த சம்பவங்கள் தொடர்பான தகவல் கிடைத்தவுடன் திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்ட காவல்துறையினர் உடனடியாக உஷார்படுத்தப்பட்டனர். கூடுதல் காவல் படை களமிறக்கப்பட்டு, இரு மாவட்டங்களிலும் ஆயுதம் ஏந்திய தீவிர வாகன சோதனைகள் (Vigorous Armed Vehicle Checks) மேற்கொள்ளப்பட்டன.

குற்றவாளிகளை கண்டறிந்து கைது செய்ய ஒருங்கிணைந்த தேடுதல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டதுடன், வழக்கமாக குற்றவாளிகள் பதுங்கக்கூடிய இடங்களிலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்ட காவல்துறையினர் மேற்கொண்ட தீவிர தொடர் நடவடிக்கைகளின் விளைவாக, மேற்கண்ட சம்பவங்களில் தொடர்புடைய 3 இளஞ்சிறார்கள் உட்பட மொத்தம் 8 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். தலைமறைவாக உள்ள மற்ற குற்றவாளிகளை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன.

சரித்திர பதிவேடு கொண்ட குற்றவாளிகள் மற்றும் வழக்கமாக குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, அவர்களின் செயல்பாடுகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு, தேவையான தடுப்பு மற்றும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களின் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், வன்முறைச் சம்பவங்களைத் தடுக்கவும், சட்டம்ஒழுங்கை சீர்குலைக்கும் குற்றவாளிகள் மீது கடுமையானநடவடிக்கைகளைஎடுக்கவும்திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்ட காவல்துறையினர் உறுதி பூண்டுள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம். பட்டதாரி. தமிழில் உரையாடுதல். தமிழில் பிழையின்றி எழுதுதல். தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## இலங்கை சிறையில் வாடும் 6 மீனவர்களை உடனே விடுவிக்க வேண்டும்

### முதலமைச்சருக்கு முத்துக்குமார் கோரிக்கை

நாகர்கோவில் மே 31



இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டிருக்கும் 6 மீனவர்களை விடுவிக்க தமிழக அரசு துரிதமாக செயல்பட வேண்டும் என்று, அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனர் முத்துக்குமார் தமிழக முதலமைச்சருக்கு கோரிக்கை வைத்துள்ளார்.

இது தொடர்பாக முத்துக்குமார் கூறியதாவது:

கன்னியாகுமரி மாவட்டம் மணக்குடி பகுதியை சேர்ந்த அலெக்ஸ், அந்தோணி ராஜன், அலெக்சியா, அருள் பிரிட்டோ, ஆல்பர்ட், சகாய செல்வகானு ஆகிய ஆறு மீனவர்கள், இராமேஸ்வரம் கடலில் மீன் பிடிக்க சென்ற போது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இருபது நாட்களுக்கு மேலாகியும், இலங்கை அரசு சிறைப்பிடிக்க பட்டுள்ள மீனவர்களை இதுவரையிலும் விடுக்கவில்லை. இதனால் மீனவ குடும்பங்கள் கடும் வேதனையில் உள்ளனர். தமிழக முதல்வர் 6 மீனவர்களையும் மீட்டு தருவார்என்கிற நம்பிக்கையில் உள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறைப் பிடிக்கபடுவதும், படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர்ந்து நடந்து கொண்டே தான் இருக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் தமிழக முதல்வரின் செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்கிறமனநிலையிலும்மீனவர்கள் உள்ளார்கள். தமிழக முதலமைச்சர் ஆறு மணக்குடி மீனவர்களை துரிதமாக மீட்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், இதுபோன்ற நிகழ்வுகள் இனிமேலும்தமிழகமீனவர்களுக்கு நிகழாத வகையில் தமிழக அரசு செயலாற்றிட வேண்டும்." இவ்வாறு முத்துக்குமார் கூறியுள்ளார்.



### கன்னியாகுமரி தொகுதியில்

## அதிமுக வெற்றிக்கு உறுதுணையாக இருந்த கலப்பை மக்கள் இயக்கம்!

### பிடி செல்வகுமாரின் வீட்டிற்கு சென்று நன்றி தெரிவித்த தளவாய்சுந்தரம் எம்.எல்.ஏ.,

நாகர்கோவில், மே31

கலப்பை மக்கள் இயக்க தலைவர் பி.டி. செல்வகுமார் வீட்டிற்கு சென்று நேரில் சந்தித்து தளவாய் சுந்தரம் எம்.எல்.ஏ., நன்றி தெரிவித்தார்.

கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் தளவாய் சுந்தரம், இன்று கொட்டாரத்தில் உள்ள கலப்பை மக்கள் இயக்கத் தலைவர் பிடி செல்வகுமாரின் இல்லத்திற்குச் சென்று நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில், அதிமுக வேட்பாளராக போட்டியிட்ட தளவாய் சுந்தரத்தை ஆதரித்து பிடி செல்வகுமார் தீவிர தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டிருந்தார்.

இதனைத்தொடர்ந்து, தேர்தலில்வெற்றி பெற்ற தளவாய் சுந்தரம் இன்று பிடி செல்வகுமாரை அவரது இல்லத்தில் சந்தித்து, தனது வெற்றிக்காக பாடுபட்டமைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அவருக்கு சால்வை அணிவித்து கவுரவித்தார்.

அப்போது இருவரும் தொகுதி வளர்ச்சி மற்றும் மக்கள் நலன் சார்ந்த பல்வேறு விஷயங்கள் குறித்து கலந்துரையாடினர்.



# வேலூரில் கூட்டுறவுத்துறை அமைச்சர் காந்திராஜ் பேட்டி

வேலூர் மே:31

ரேசன் கடை, கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் நுகர்பொருள் வாணிப கிடங்கில் ஆய்வுசெய்தகூட்டுறவுதுறைஅமைச்சர்.

தமிழ்நாடுகூட்டுறவுத்துறைஅமைச்சர் காந்திராஜ் அவர்கள் வேலூர் மாவட்டம் காட்பாடி அடுத்த அம்முண்டி கற்பகம் கூட்டுறவு நியாய விலைக்கடை, திருவலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் திருவலத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு ஆகிய வற்றில் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டி யளித்த அமைச்சர்

இது ஒரு சாதாரணமானா ஆய்வு தான். இது தொடர்பாக கூடிய விரைவில் விளக்கத்தை கொடுக்கிறேன் என்றார்.

கூட்டுறவில் வழங்கப்படும் பொருட்கள் தரம் இல்லை என கேட்டதற்கு மிக விரைவில் தமிழ்நாடு முதல்வர் அதற்கான விளக்கத்தை கொடுப்பார், அவருடைய வழிகாட்டுதலின்கீழ்தான்நாங்கள்செயல்படுகிறோம் என்றார். தேர்தலுக்கு முன்பாக பேசிய முதல்வர் விஜய் அவர்கள் தற்போது வாய் திறப்பதில்லை என் எதிர்க்கட்சிகள் கூறி இருந்தது குறித்து கேட்டதற்கு உரிய பதில் அளிக்காமல் புறப்பட்டு சென்றார்.

## வேலூர் மாவட்டத்தில்

# அம்மா மக்கள் முன்னேற்ற கழக வேலூர் மாவட்ட செயலாளர் B.k.R சதீஷ்குமார்க்கு சிறப்பான வரவேற்பு



வேலூர் மே:31

வேலூர் மாநகர மாவட்ட கழக செயலாளராக B.K.R சதீஷ்குமார் அவர்களை நியமனம் செய்த பொதுச் செயலாளர் TTV. தினகரன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும் வேலூர் மாநகர் மாவட்ட கழக செயலாளராகB.K.R சதீஷ்குமார் வேலூர் பழைய மாநகராட்சி அருகே உள்ள அண்ணா சிலைக்கும் எம்ஜிஆர் சிலைக்கும் எதிர்ப்புறம் உள்ள பெரியார் சிலைக்கும் மக்கான் அம்பேத்கர் சிலைக்கும் காட்பாடி ஓட பிள்ளையார் பேருந்து நிலையம் அருகே உள்ள எம்ஜிஆர் சிலைக்கும் சித்தூர் பேருந்து நிலையம் அருகே உள்ள எம்ஜிஆர் சிலைக்கும் அனைத்து சிலைகளுக்கும் மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார் அவர்களுடன் பகுதி கழக செயலாளர்கள் டைலர் ரவி காட்பாடி சக்திவேல் காட்பாடி எம் டி விஜயராஜன் வேலூர் சோமு காட்பாடி சரவணன் சத்துவாச்சாரி மோகன் மேற்கு அலமேலுபுரம் உடன் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



## சிப்காட் வளாகப் பகுதியில்

# தருமபுரி சட்டப்பேரவை உறுப்பினர் சௌமியா அன்புமணி ஆய்வு

தருமபுரி மே 31

தருமபுரி அடுத்த தடங்கம் ஊராட்சியில் சிப்காட் வளாகத்தில் தருமபுரி சட்டப்பேரவை உறுப்பினர் சௌமியா அன்புமணி ஆய்வு மேற்கொண்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சௌமியா அன்புமணி சிப்காட் அமைய உள்ள இந்த பகுதியில் சுமார் 100 கோடி மதிப்பிலான பணிகள் நடைபெற்று வருகிறது. 30 மீட்டர் அகலத்தில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. இனைப்பு சாலை பணிகள் நடைபெற்று வருகிறது. சுமார் 1,700 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதில் 1,230 ஏக்கர் தரிசு நிலம், 500 ஏக்கர் பட்டா நிலம் விவசாயம் செய்யப்படாத நிலம் என்றார். தருமபுரி சிப்காட்டில்

நல்லதொழிற்சாலைகள்வந்துவேலை வாய்ப்பை வழங்க வேண்டும். ஒரு ஏக்கர் விவசாய நிலம் கூட சிப்காட்டுக்காக எடுக்க கூடாது என்பதில் பாமக உறுதியாக உள்ளது. திருவண்ணாமலை, கடலூர் உள்ளிட்ட பகுதியிலும் விவசாய நிலங்களை கையகப்படுத்த எதிர்ப்பு தெரிவித்தது பாமக என நினைவு கூர்ந்தார். தற்போது முதல் கட்டமாக 200 ஏக்கர் நிலப்பரப்பில் சாலை வசதிகள் செய்யப்பட்டு வருகிறது. தண்ணீருக்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நான்கு கோடி மதிப்பீட்டில் மேல் நிலை நீர் தேக்க தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. மின்சார

வசதிக்காக 17 ஏக்கர் மின்சார வாரியத்திற்குவழங்கப்பட்டுள்ளது.சுற்றுச்சூழல் பாதிப்பில்லாத வகையில் சிப்காட் அமைக்கப்பட வேண்டும். தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்பட வேண்டும். சிப்காட் அமைய உள்ள இந்த பகுதி மேடு பள்ளமானஇடம்தொழிற்சாலைகள்அமைக்க நிலத்தை சமன்படுத்த நிறைய செலவாகிறது. அதிக முதலீடு தேவைப்படுகிறது மண் சமன் செய்து சிப்காட் வழங்க வேண்டும் என

கோரிக்கை விடுப்பதாக தெரிவித்தார். தற்பொழுது 9 தொழிற்சாலைகள் வர உள்ளதாக தெரிவித்துள்ளார். தருமபுரி மாவட்டம் மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய தொழிற்சாலையாக அமைய வேண்டும் என தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் தருமபுரி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ் .பி. வெங்கடேஸ்வரன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## குலசேகரம் அருகே

# வீட்டில் நகை மாயமான விவகாரம்; ஒரே குடும்பத்தில் 3 பேர் விஷம் குடித்து தற்கொலை முயற்சி

மார்த்தாண்டம், மே. 31

குமரி மாவட்டம் திற்பரப்பு அருகே உள்ள பகுதியை சேர்ந்த 72 வயதான முதியவர் ஒருவர் குலசேகரம் காவல்நிலையத்தில் ஒரு புகார் அளித்தார். அந்த புகாரில் அவர் தனது வீட்டில் 46 கிராம் தங்க நகைகள் இருந்தன. அந்த நகையை கடந்த 28. 5. 2026 அன்று பீரோவை திறந்து பார்த்தபோது காணவில்லை. வீடு முழுவதும் தேடியும் கிடைக்கவில்லை. இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என அந்த புகாரில் கூறியிருந்தார்.

இதன் பேரில் வழக்கு பதிவு செய்துள்ள போலீசார் வீட்டில் இருந்த முதியவரின் 3வது மகனை விசாரணைக்காக அழைத்தனர். அவர் தனது மனைவி மற்றும்குழந்தையுடன்காவல்நிலையத்திற்குசென்றார். போலீஸ் நிலையத்தில் அவர்கள் மீது விஷ வாடை வீசியதும், போலீசார் விசாரித்த போது, மூவரும் விஷம் குடித்ததாக கூறினார்.

இதை எடுத்து அவர்கள் வந்த ஆட்டோவில் அவர்களை ஏற்றி குலசேகரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மகன் மீது சந்தேகப்பட்டு விசாரணைக்கு அழைத்ததால் குடும்பத்துடன் மகன் விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றதாக கூறப்படுகிறது. இந்த சம்பவத்தால் பரபரப்பு ஏற்பட்டது.



தருமபுரி மாவட்ட புதிய ஆட்சியராக வி. சரவணன் நியமிக்கப்பட்டு உள்ளனர் . இவர் திருச்சியில் மாவட்ட ஆட்சியராக பணிபுரிந்து வந்தவர்.

## சென்னையில்

# கூட்ட நெரிசலில் தவறிப்போன சிறுமி மீட்பு: ரெயில்வே போலீசாருக்கு பயணிகள் பாராட்டு



சென்னை, மே. 31

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் நேற்று மாலை கூட்டநெரிசலில்தவறிப்போன 5 வயது சிறுமியை ரெயில்வே பாதுகாப்புப் படை (RPF) மற்றும் அரசு ரெயில்வே போலீசார் (GRP) சில நிமிடங்களிலேயே சாமர்த்தியமாக மீட்டு அவளது பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தின் 5வது நடைமேடையில் நேற்று மாலை 5 மணியளவில் கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரெயில் புறப்படத் தயாராக இருந்தது. அப்போது பொதுப்பெட்டி அருகே பெண் ஒருவர் தனது குழந்தையைக் காணவில்லை என்று கதறி அழுது தேடிக் கொண்டிருந்தார்.

அப்போது அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த ஆர். பி.எஃப். பெண் காவலர் ஸ்வாதி உடனடியாக ஜி.ஆர். பி. போலீசாருக்குத் தகவல் கொடுத்துவிட்டு நடைமேடை முழுவதும் தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளார். போலீசாரின் துரித நடவடிக்கையால், அதே நடைமேடையில் இருந்த ஏசி பெட்டி அருகே தனியாக நின்று அழுதுகொண்டிருந்த தர்ஷனா என்ற அந்த 5 வயது சிறுமி பத்திரமாக மீட்கப்பட்டாள்.

போலீசார் மேற்கொண்ட விசாரணையில், குடும்பத்துடன் பயணம் செய்ய வந்த இடத்தில் கூட்ட நெரிசல் காரணமாக அந்தச் சிறுமி பெற்றோரைப் பிரிந்தது தெரியவந்தது. அடையாளங்கள் உறுதி செய்யப்பட்டு சிறுமி பத்திரமாக ஒப்படைக்கப்பட்டதைத்தொடர்ந்து,நெகிழ்ந்துபோன பெற்றோர் மற்றும் அங்கு திரண்டிருந்த பயணிகள் அனைவரும் ரெயில்வே பாதுகாப்புப் படையினரின் இந்த மின்னல் வேகச் செயல்பாட்டையும் கடமை உணர்வையும் வெகுவாகப் பாராட்டினர்.

## கோவை சிறுமி வன்கொடுமை வழக்கு:

# சிறையில் சக கைதிகள் தாக்கியதில் கைதி கார்த்திக் காயம்



கோவை, மே. 31

கோவைமாவட்டம், சூலூரைச் சேர்ந்த 10 வயது சிறுமி கடந்த மே 22ஆம் தேதி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக சூலூர் காவல் நிலைய போலீசார் போக்ஸோ சட்டத்தின்கீழ்வழக்குப்பதிவுசெய்துநாகப்பட்டினத்தைச் சேர்ந்த கார்த்தி (33), இவருக்கு உடந்தையாக இருந்த தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ராமசாமி மகன் மோகன்ராஜ் (39) ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

இவர்களில் போலீசார் விசாரணையின்போது தப்ப முயன்ற கார்த்தி மாடியில் இருந்து குதித்ததில் கை, கால் முறிந்து கோவை அரசு மருத்துவமனையில் கைதிகளுக்கான வார்டில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மோகன்குமார் நீதிமன்ற காவலில் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், கோவை சிறுமி வன்கொடுமை செய்து கொல்லப்பட்ட வழக்கில் கைதான கார்த்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கோவை மத்திய சிறையில் நேற்று முன்தினம் அடைக்கப்பட்ட கார்த்தியை சக கைதிகள் தாக்கியதாக தகவல் வெளியாகி உள்ளது. சக கைதிகள் தாக்கியதில் கார்த்தி பலத்த காயமடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



# ரேவதி ஹெல்த் சிட்டி புதிய கிளை திறப்பு விழா

திருப்பூர் மே 31

திருப்பூர்.அவிநாசியில் உயர்தர மருத்துவ சிகிச்சை அவசர தீவிர சிகிச்சை மற்றும் பலதுறை வெளி நோயாளிகள் பிரிவுடன் பல்வேறு துறை சார்ந்த மருத்துவ சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்களின் மிகச்சிறந்த அர்ப்பணிப்போடு கூடிய திறமை நிபுணத்துவம் இணைந்து திருப்பூரில் 32 வருடங்களாக அனுபவம் உள்ள ரேவதி மெடிக்கல்சென்டரில்புதியகிளையினை அவிநாசி மற்றும் சுற்றுவட்டார பகுதி மக்களுக்காக அற்ப்பனித்தனர் இந்த நிகழ்வில் டாக்டர் ஈஸ்வரமூர்த்தி தலைமை ஏற்றார் டாக்டர் முருகானந்தம் முன்னிலை வகித்தார் டாக்டர் விஷ்ணு ராகவ் வரவேற்புரையாற்றினார் டாக்டர் சிகாமணி திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார் விழாவில் பல்வேறு துறை முக்கிய பிரமுகர்கள் மருத்துவர்கள் சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்..

## முதுகுளத்தூரில்

# ஜல்ஜீவன் குழாய் உடைப்பு; குடிநீர் வீணாகி கால்வாயில் கலக்கும் அவலம்



முதுகுளத்தூர், மே.31

முதுகுளத்தூர் பள்ளிவாசல் மேல்நிலைப் பள்ளி அருகே உள்ள மெயின் ரோட்டில் ஜல்ஜீவன் குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டு, கடந்த ஒரு மாத காலமாக தினம்தோரும் பல லட்சம் குடிநீர் வீணாக அருகில் உள்ள வாய்க்காலில் பாய்ந்து வருகிறது.

இதனால் பொதுமக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல முறை புகார் தெரிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் ஜல் ஜீவன் திட்ட அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் அலட்சியம் காட்டி வருகின்றனர். இந்த கோடைகாலத்தில் குடிநீர்கிடைக்காமல் பல கிராமங்களில் பல கிலோமீட்டர் நடந்து தண்ணீர் தேடி வரும் நிலையில் நாள்தோரும் பல லட்சம் லிட்டர் குடி தண்ணீர் வீணாவது வருத்தமாகவும் வேதனையாகவும் உள்ளது. எனவே சம்மந்தபட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து உடைப்பை அடைத்து குடிநீர் வீணாவதை தடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



சென்னை ஆவடி, பிரதான சாலை திரு சங்கரர் நகரில், அமைந்துள்ள அருள்மிகு சங்கர விநாயகருக்கு புனராவர்த்தன ஜீரணோத்தாரண நூதன பாலமுருகர் மற்றும் ஐயப்ப சுவாமி பிரதிஷ்டை செய்து அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா நடைபெற்றது. இவ்விழாவில் அருள்மிகு கமலகண்ணி அம்மன் திருக்கோயில் மௌனகுரு, தவத்திரு சச்சிதானந்த சுவாமிகள் கும்பாபிஷேக விழாவில், கலந்துகொண்டு சிறப்பித்தார். ஆலயம் சார்பில் கும்பாபிஷேக விழாவுக்கு வருகை தந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



தமிழகம் முழுவதும் ஜீன் 4 ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என தமிழக முதல்வர் ஜோசப்விஜய் ஆரிவித்திருந்தார். அதனடிப்படையில்கிருஷ்ணகிரிமாவட்டம்முழுவதும் உள்ளஅரசுபள்ளிவளாகத்தைசுத்தம்செய்யவேண்டிமாவட்டஆட்சியர்ச.தினேஷ்குமார் உத்தரவின்பேரில்திட்டஇயக்குநர்கவிதாஆலோசனையில்பர்கூர்ஊராட்சிஒன்றியத்தில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் ஊராட்சி பணியாளர்கள் கொண்டு சுத்தம் செய்யப்பட்டது. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உமாசங்கர், முகுந்தா ஆகியோர் வழிகாட்டுதலில் நடைபெற்று வரும் இந்த பணிகள் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், சுகாதார ஒருங்கிணைப்பாளர் உடன் ஊராட்சி செயலர் மேற்பார்வையில் நடைபெற்றது.



### கன்னியாகுமரி
# பகவதி அம்மனுக்கு முக்கடல் சங்கமத்தில் ஆராட்டு இரவில் தெப்போற்சவம் நடந்தது

கன்னியாகுமரி,மே.31

பிரசித்தி பெற்ற கன்னியாகுமரி அம்மன் கோவிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதம் பெருந்திருவிழா நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான வைகாசி பெருந்திருவிழாகடந்த 21 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இந்த திருவிழா நேற்று (சனிக்கிழமை) வரை தொடர்ந்து நடைபெற்று வந்தது.

திருவிழாவையொட்டி தினமும் அபிஷேகமும், 11.30 மணிக்கு அலங்கார தீபாராதனையும், நண்பகல் 12 மணிக்கு சிறப்பு அன்னதானமும், மாலை சமய உரையும், இரவு இன்னிசை கசச்சேரியும்,இரவு 9 மணிக்கு அம்மன் வாகனத்தில் எழுந்தருளி வீதி உலா வரும் நிகழ்ச்சியும் நடந்தது வந்தது.

9 ஆம் திருவிழாவான நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) காலையில் தேரோட்டம் நடைபெற்றது.10ம் திருவிழாவான நேற்று (சனிக்கிழமை) அதிகாலை 6.15 மணிக்கு மேல் 7 மணிக்குள் அம்மனுக்கு முக்கடல் சங்கமத்தில் ஆராட்டு நிகழ்ச்சி நடந்தது.

பின்னர் 10 மணிக்கு சிறப்பு அபிஷேகமும். 12 மணிக்கு சிறப்பு அன்னதானமும் நடந்தது. மாலை 5 மணிக்கு மண்டகப்படி நிகழ்ச்சியும்,6 மணிக்கு ஆன்மீக உரையும். இரவு 8 மணிக்கு நர்த்தன பஜனையும், நடைபெற்றது.

இரவு 9 மணிக்கு கோவிலில் இருந்து பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பகவதி அம்மனை வாகனத்தில் எழுந்தருளசெய்து ஊர்வலமாக தெப்பக்குள த்துக்கு எடுத்து வந்து தோரணங்கள் மற்றும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தெப்பத்தில் எழுந்தருளசெய்து தெப்பக்குளத்தை சுற்றி 3 முறை மேளதாளம் முழங்க வலம்வர செய்தனர்.

தெப்பத் திருவிழாவை யொட்டி தெப்பக்குளத்தை சுற்றி தோரணங்கள் மற்றும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். பின்னர் நள்ளிரவு முக்கடல் சங்கத்தில் பகவதி அம்மனுக்கு ஆராட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.




### கிருஷ்ணகிரியில்
# உலக புகையிலை எதிர்ப்பு தினத்தையொட்டி இந்திய பல் மருத்துவர்கள் சங்கம் சார்பில் விழிப்புணர்வு பேரணி

கிருஷ்ணகிரி, மே.31

உலக புகையிலை எதிர்ப்பு தினத்தை ஒட்டி கிருஷ்ணகிரி பல் மருத்துவர்கள் சங்கம் சார்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா சிலை எதிரே துவங்கிய விழிப்புணர்வு பேரணிக்கு இந்திய பல் மருத்துவர்கள் சங்க கிருஷ்ணகிரி கிளை தலைவர் மருத்துவர் பிரபு தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். அப்போது புகை என்னும் சிகரெட், பீடி குடிப்பதன் மூலமாகவும், புகையிலைப் பொருட்கள் பயன்படுத்துவதன் மூலமாக, மனிதர்களுக்கு ஏற்படும் கேன்சர்நோய் குறித்தும், இதனால் மனிதர்களின் உடல்நிலை பாதிப்பு குறித்தும், சிறப்புரையாற்றினார்.

கிருஷ்ணகிரி பல் மருத்துவர்சங்க செயலாளர் டாக்டர் நிவாஸ். சி டி எச் கன்வேயர் டாக்டர் ஆயிஷா பிரதோஷ், மருத்துவர் சுரேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து விழிப்புணர்வு பேரணியை கிருஷ்ணகிரி பல் மருத்துவர் சங்க தலைவர் பிரபு கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்த விழிப்புணர்வு பேரணியில் ஜெய் மாருதி நர்சிங் காலேஜ் பயிலும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவிகள் மற்றும் மாணவர்கள் பங்கேற்று கையில் விழிப்புணர்வு பதாகை ஏந்தி புகையினால் உண்டாகும் நோய்களை குறித்து கோஷங்கள் எழுப்பி ஊர்வலமாக சென்றனர்.

கிருஷ்ணகிரி பெங்களூர் சாலை வழியாக பழைய வீட்டு வசதி வாரிய பகுதி, லண்டன் பேட்டை, வழியாக சென்று புனித பாத்திமா மேல்நிலைப்பள்ளி இணைப்பு சாலை பகுதியில் முடிவடைந்தது. இந்த விழிப்புணர்வு பேரணிக்கான ஏற்பாடுகளை ஜெய் மாருதி இன்ஸ்டியூட் ஆப் காலேஜ் தாளாளர் முத்துக்குமார், கல்லூரியின் முதல்வர் மகேஸ்வரி மற்றும் 25க்கும் மேற்பட்ட பல் மருத்துவர்கள் பங்கேற்று சிறப்பித்தனர். விழிப்புணர்வு பேரணிக்கானபாதுகாப்பு ஏற்பாடுகளை கிருஷ்ணகிரி நகர காவல் துறையினர் செய்திருந்தனர்.

### நாகர்கோவிலில் அருகே
# கப்பலில் வேலை வாங்கி தருவதாக ரூ.41 லட்சம் மோசடி; பெண் உட்பட 5 பேர் மீது வழக்கு

நாகர்கோவில், மே.31

நாகர்கோவில் செட்டிகுளம், கணபதி நகர் பகுதி சேர்ந்தவர் கலைச்செல்வி (59). இவர் குமரி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஒரு புகார் அளித்தார். அந்த புகாரில் கூறியிருப்பதாவது:

எனது கணவர் ராமர் 2016 ஆம் ஆண்டு இறந்து விட்டார். இந்த நிலையில் கடந்த 2019 ம் ஆண்டு திசையன்விளை பகுதியை சேர்ந்த மாலதி என்பவர் எனக்கு அறிமுகமானார். அவர் பலருக்கு வெளிநாட்டில் வேலை வாங்கி கொடுத்துள்ளதாக கூறினார். எனது மகனுக்கும் கப்பலில் வாங்கி தருவதாகவும், இதற்காக ரூ. 45 லட்சம் வரை செலவாகும் என்று கூறினார். அதிக சம்பளம் கிடைக்கும் என்பதால் இந்த கடனை எளிதாக அடைத்து விடலாம் என ஆசை வார்த்தை கூறினார்.

இதை நம்பி நான் எனது மகனின் வேலைக்காக ரூ. 45 லட்சம் கொடுத்தேன். ஆனால் பணத்தை வாங்கிய அவர்கள் வேலை எதுவும் வாங்கிக் தரவில்லை. இது குறித்து காவல்துறையில் புகார்அளிப்பேன் என்று நான்கூறியதால் ரூ. 4 லட்சத்தை மட்டும் திருப்பி தந்தனர். மீதி ரூ. 41 லட்சத்தை தராமல் மோசடி செய்து விட்டனர். பணத்தை கேட்டால் தற்போது மிரட்டி வருகிறார்கள். என புகாரில் கூறியுள்ளார்.

இந்த புகார் தொடர்பாக கோட்டார் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த மாவட்ட எஸ் பி ஸ்டாலின் உத்தரவிட்டார். அதன் பேரில் தற்போது கலைச்செல்வியின் புகாரின் பேரில் அவரது ரூ 41 லட்சத்தை திருப்பி கொடுக்காமல் நம்பிக்கை மோசடி செய்ததாக திசையன்விளை சேர்ந்த மாலதி, கரம்பாடு சகாய கணேஷ், மன்னார் புரத்தை சேர்ந்த சேவியர் லிபர்ட், திசையன்விளையைச் சேர்ந்த பலன், இசக்கிமுத்து ஆகிய 5 பேர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

### குமரியின்
# 54ஆவது கலெக்டராக திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் பிரதாப் நியமனம்
## கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்தவர்



நாகர்கோவில், மே. 31

கன்னியாகுமரி மாவட்டத்தின் கலெக்டராக அழகு மீனா அழகு மீனா கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் தேதி பொறுப்பேற்றார். தற்போது அவர் அவர் சென்னையில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை துணைச் செயலாளராக பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக திருவள்ளூர் மாவட்ட கலெக்டராக பணியாற்றி வந்த பிரதாப் குமரி மாவட்ட கலெக்டராக நியமிக்கப்பட உள்ளார்.

பிரதாப் விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு என்ற கிராமத்தில் விவசாய குடும்பத்தில் பிறந்தவர். தந்தை முருகன் விவசாயி. தாயார் முல்லைக்கொடி தனது குடும்பத்திலே முதல் பட்டதாரி மற்றும் முதல் அரசு அதிகாரி என்ற பெருமையை பெற்றவர்.

பிரதாப் சிறுவயது முதலே மாவட்ட ஆட்சியராக மாற வேண்டும் என்ற லட்சியத்துடன் படித்துள்ளார். அண்ணா பல்கலைக்கழகத்தில் கெமிக்கல் இன்ஜினியரிங் படித்த இவர் 2017 ஆம் ஆண்டு தனது முதல் முயற்சியிலேயே சிவில்சர்வீஸ் தேர்வில் தேர்ச்சி பெற்றார். அந்த ஆண்டில் தமிழக அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்தார்.

2017- 18 காலகட்டத்தில் உத்தர காண்ட் மாநிலத்தில் பயிற்சி அதிகாரியாகவும், பின்னர் திருவண்ணாமலையில் துணை ஆட்சியராகவும் பணியை தொடங்கினார். ஒன்றிய அரசின் கிராமப்புற மேம்பாட்டு துறையிலும் பணியாற்றியவர். 2019 தர்மபுரி மாவட்டம் அரூர் துணை ஆட்சியராக பணியாற்ற போது ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோருக்கு பட்டா வழங்கியது மற்றும் மலை கிராமங்களுக்கும் மின் இணைப்பு வழங்கியது மக்களிடையே அவருக்கு நற்பெயரை பெற்று தந்துள்ளது.

திருவண்ணாமலையில் கூடுதல் ஆட்சியராக பணியாற்றிய போது ஒரே மாதத்தில் ஆயிரம் குளங்களை வெட்டுவதற்கான ஆணையைப் பெற்று, அதனை சாதித்தும் காட்டினார். இந்த அபார சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றதுடன், தமிழக முதலமைச்சரின் விருதையும் இவருக்கு பெற்று தந்தது.

2022ல் கோவை மாநகராட்சி ஆணையராக ஸ்மார்ட் சிட்டி திட்ட மேலாளராகவும் பொறுப்பேற்ற பிரதாப், வார்டு வாரியாக சென்று மக்கள் குறைகளை கேட்டு அறிந்தார். குறிப்பாக கோவையின்நீண்டகாலகுடிநீர்பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டதால் பொதுமக்களால் பெரிதும் பாராட்டப்பட்டவர்.

தொடர்ந்து 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி 2 ம் தேதி திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் பணியில் சேர்ந்தார். குமரி மாவட்ட கலெக்டராக தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். குமரி மாவட்டத்தின் 54 வது கலெக்டராக வரும் 1ம் தேதி பிரதாப் பொறுப்பேற்க உள்ளதாக தெரிய வருகிறது.

### குமரி மேற்கு மாவட்ட கடற்பகுதியில்
# 60 நாள் மீன்பிடித்தடைக்காலம் நாளை 1ம் தேதி தொடக்கம்

மார்த்தாண்டம், மே.31

மீன்களின்இனப்பெருக்கபருவகாலத்தில் விசைப்படகுகள் கடலில் மீன்பிடிப்பதற்கு மத்திய அரசு 60 நாட்கள் தடைவிதித்துள்ளது.

குமரி மாவட்டத்தில் இந்த தடைக்காலம் 2 பருவ காலமாக உள்ளது. குமரி கிழக்கு கடற்கரை பகுதியாகிய கன்னியாகுமரி, சின்னமுட்டம் பகுதியில் ஆண்டுதோறும் ஏப்ரல் 15ம் தேதி முதல் ஜூன் 15ம் தேதிவரை ஆகும். மேற்கு கடற்கரை பகுதிகளாகிய மணக்குடி, ராஜாக்கமங்கலம், முட்டம், குளச்சல், தேங்காய்பட்டணம், கொல்லங்கோடு, நீரோடி ஆகிய கடற்கரை கிராமத்தில் ஜூன் 1ம் தேதி முதல் ஜூலை 31ம் தேதி வரையும் தடைக்காலம் அமலில் இருக்கும்.

தேங்கா பட்டணம் கடல் பகுதியில் சுமார் 1200 விசைப்படகுகளும், குளச்சல் கடல் பகுதியில் சுமார் 300க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன்பிடித் தொழிலில்ஈடுபட்டுவருகின்றன.விசைப்படகு ஆழ்கடல் பகுதிக்கு சென்று 7 முதல் 10 நாட்கள் வரை தங்கி மீன்பிடித்துவிட்டு கரை திரும்பும். இதற்கு தேவையான உணவு, குடிநீர் மற்றும் ஐஸ் போன்ற அத்தியாவசிய பொருட்களை விசைப்படகில் எடுத்து செல்வர். இந்த வருடம் குமரி மேற்கு கடற்கரை கிராமங்களில் தடைக்காலம் ஜூன் 1ம் தேதி (நாளை ) நள்ளிரவு தொடங்குகிறது. இந்த மீன்பிடி தடைக்காலத்தில் விசைப்படகினர் தங்கள் படகுகளை பழுது பார்ப்பது வழக்கம். மேலும் வலைகள், மீன்பிடி உபகரணங்களையும் பராமரிப்பு செய்து கொள்கின்றனர்.

இந்த மீன்பிடி தடைக்காலம் தொடங்குவதை முன்னிட்டு ஆழ்கடல் பகுதிக்கு சென்ற விசைப்படகினர் கரை திரும்பிய வண்ணம் உள்ளனர்.பெரும்பான்மையான விசைப்படகுகள் கரை திரும்பி விட்டன.அவை மீன் பிடித்துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டுள்ளது.

மீதி விசைப்படகுகள் நாளை நள்ளிரவுக்குள் கரை திரும்பி விடும். ஆனால் பைபர் வள்ளம், கட்டுமரங்கள் குறைவான தூரம் சென்று மீன்பிடித்துவிட்டு உடனே கரை திரும்புவதால் வருடத்தின் அனைத்து நாட்களிலும் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுகிறது. விசைப்படகு தடை நாள்களில் கட்டுமரங்களில் பிடித்து வரப்படும் மீன்களுக்கு பெரும் மவுசு ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

### கோவை நவக்கரையில் நடைபெற்ற
# 8ஆம் ஆண்டு ரேக்ளா பந்தயம் மற்றும் இலவச ஆம்புலன்ஸ் சேவை தொடக்க விழா



கோவை மே:31

கோவை தமிழக வெற்றிக் கழகம் நவக்கரை ரேக்ளா கிளப் மற்றும் வின்னர்ஸ் இந்தியா குழுமம் இணைந்து 8ஆம் ஆண்டு ரேக்ளா பந்தயத்தை எட்டிமடை வின்னர்ஸ் & சிவாலயா காம்ப்ளெக்ஸ்கவிதா சினிமாஸ் இடையே உள்ளபாலக்காடுசாலையில்மிகச்சீரும் சிறப்புமாக நடந்தது.

இப்போட்டியில் 200 மீட்டர் மற்றும் 300 மீட்டர் பிரிவுகளில் வெற்றி பெற்றவர்கள் 200 மீட்டர் & 300 மீட்டர் முதற்பரிசு ₹50,000 சி.கே. கண்ணன் (நிர்வாக இயக்குநர், வின்னர்ஸ் குழுமம்)200 மீட்டர் இரண்டாம் பரிசு ₹30,000 விக்னேஷ் (மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர்)300 மீட்டர் இரண்டாம் பரிசு ₹30,000 அன்பு தினேஷ் 200 மீட்டர் & 300 மீட்டர் மூன்றாம் பரிசு ₹15,000 பவிக்ஷா (கோவை) பரிசுகள் வழங்கப்பட்டது.

மேலும் ஒரு இலவச ஆம்புலன்ஸ் எட்டிமடை எல்லை மாகாளியம்மன் தீர்மாலயா அறக்கட்டளை,கிருஷ்ணசாமி கவுண்டர் ட்ரஸ்ட் மற்றும் வின்னர்ஸ் இந்தியா குழுமம் ஆகியவை இணைந்து கடந்த 4 ஆண்டுகளாகப் பொதுமக்களுக்கு இலவச ஆம்புலன்ஸ் சேவையைச் சிறப்பாக வழங்கி வருகின்றன.இந்தச் சேவையை மேலும் விரிவுபடுத்தும் விதமாக,வின்னர்ஸ் இந்தியா குழுமத்தின் நிர்வாக இயக்குநர் சி.கே. கண்ணன், நவக்கரை ரேக்ளா கிளப்பின் வாயிலாக மேலும் ஒரு புதிய இலவச ஆம்புலன்ஸை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இந்த விழாவில் வழங்கியுள்ளார்.



### தஞ்சாவூர் மாவட்டத்தில்
# தூர் வாரும் பணிகள் 90 சதவீதம் நிறைவு; கலெக்டர் தகவல்

தஞ்சாவூர் மே 31

தஞ்சாவூர் மாவட்டத்தில் தூர் வாரும் பணிகள் 90சதவீதம் நிறைவடைந்து உள்ளது என மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்

தஞ்சாவூர் அடுத்துள்ள பள்ளியக்ர ஹாரம் வெண்ணாற்றில் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் 4 பொக்லின் எந்திரங்கள் மூலம் தூர் வாரும் பணிகள் நடைபெற்று வருகிற து.இந்தப் பணிகளை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் ஆய்வு செய்தார். அப்போது அவர் இந்த பணிகளை விரைந்து முடிக்க வேண்டு ம் என பணியாளர்களை அறிவுறுத்தினார் .

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் சிறப்பு தூர்வாரும் பணிகள் நீர்வள ஆதாரத் துறை சார்பில் நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் ரூபாய் 26 கோடி மதிப்பீ ட்டில் 1,300 கிலோமீட்டர் தூரத்துக்கு தூர் வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் இதுவரை 90 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளது மீதமுள்ள பணிகள் ஒரு வாரத்திற்குள் நிறைவடையும்

அதேபோல் மாவட்டத்தில் உள்ள சி, டி,பிரிவு வாய்க்கால்கள் வேளாண் பொறியியல் துறை மூலம் 377 கிலோமீட்டர் நீளத்திற்கு தூர்வார திட்டமிட்டு, இதுவரை 290 கிலோமீட்டர் நீளத்திற்கு தூர்வாரப்பட்டுள்ளது.தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ரூபாய் 3.30 கோடி மதிப்பீட்டில் புதிதாக வாங்கப்பட்ட 7 பொக்லைன் இயந்திரங்கள் மூலம் நீர்நிலைகள் சீரமைப்பு பணி மேற் கொள்ளப்பட்டு வருகிறது இந்த எந்திரங்களுக்கான செலவுத் தொகை தனியார் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் மூலமும், மாவட்ட கலெக்டரின் தன்விருப்ப நிதி மூலமும்,செலவு செய்யப்பட்டு வருகிறது. எங்கெல் லாம் நீர் நிலைகள் சீரமைக்க வேண்டு மோ அங்கெல்லாம் எந்திரங்கள் மூலம் சீரமைக்கப்படும்

புதிதாக வாங்கப்பட்ட அந்த எந்திர ங்களை கொண்டு தான் தற்போது வெண்ணாற்றில் பல ஆண்டுகளாக சுத்தம் செய்யாமல் இருந்த இரு கரை களும் சுத்தம் செய்யப்பட்டு, ஆற்றுக் குள் இருந்தநாணல், ஆற்றுக்குள் இருந்த நாணல், மண் திட்டுகள் அகற்றப்பட்டு வருகிறது .

முதல் கட்டமாக பெரிய கோவில் அகழி சுத்தம் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து கோட்டை சுவர் சுத்தம் செய்யப்பட உள்ளது. மாவட்டம் முழுவதும் 589 ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சிதுறைக்கு சொந்தமான 3,000 நீர் நிலைகள் உள்ளன. மேலும் நீர்வள துறைக்கு சொந்தமான ஏராளமான நிர் நிலைகள் உள்ளன. இதை அந்தந் த பகுதியில் உள்ள பொதுமக்கள் சுத்தமாக வைத்துக் கொள்ள முன் வர வேண்டும் . இதற்கான மாபெரும் இயக்கம் நடைபெற இருக்கிறது. அதேபோல் பொதுமக்களும், இளைஞர்களும், தாமாக முன்வந்து நீர்நிலைகளை சீரமைக்க இதுவரை 7 கோரிக்கைகள் வந்துள்ளது. இதை பரிசீலனை செய்து விரைவில் அதற்கான அனுமதி மாவட்ட நிர்வாகம் வழங்கும் இவ்வாறு அவர் கூறினார்

ஆய்வின் போது மாநகராட்சி கவுன்சிலர் செந்தமிழ் செல்வன் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர் .



### மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டுவதை தடுக்க
# அனைத்து கட்சி கூட்டத்தை தமிழக அரசு கூட்ட வேண்டும்: மா.கம்யூ கட்சி மாநில செயலாளர்

தஞ்சாவூர் மே 31

மேகதாது அணை பிரச்சனை தொடர்பாக தமிழக அரசு அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும் என இடதுசாரிகளில் கட்சிகள் வலியுறுத் தியுள்ளன.

காவிரியின் குறுக்கே மேகதாதுவில் கர்நாடக அரசு அணைக்கட்டும் திட்டத்தை தடுக்க கோரி, தஞ்சாவூரில் தலைமை தபால் நிலையம் அருகே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சி பி ஐ (எம் எல்) லிபரேஷன் ஆகிய இடதுசாரி கட்சிகள் சார்பில் பெருந்திரள் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இதில் பங்கேற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ .சண்முகம் தெரிவித் ததாவது :

காவிரியின் குறுக்கே மேகதாதுவில் புதிதாக அணை கட்டுவதற்கான தொடர் முயற்சியில் கர்நாடக அரசு ஈடுபட்டுள்ளது .அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் காவிரியை நம்பி உள்ள தமிழகத்தில் 8 மாவட்டங்களில் கடுமையான பாதிக்கப்படும் உச்சநீதி மன்ற தீர்ப்புக்கு விரோதமாக கர்நாடக அரசு செயல்படுகிறது .இத்தீர்ப்பை மீறி திட்ட அறிக்கை தயாரிப்பது,பூமி பூஜை போடுவது, கட்டியே தீருவோம் என சவால் விடுவது போன்றவை இரு மாநிலங்களுக்கு இடையே நல்லுற வை கெடுக்கக்கூடிய செயல், இது மேலும் சட்ட ஒழுங்கு பிரச்சனையை ஏற்படுத்தும். இந்தப் பிரச்சினையில் தமிழக அரசு எவ்வித சமரசம் இல்லாமல் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். மேலும் சட்ட ரீதியான வாய்ப்புகள் என்ன என்பதை தமிழக அரசு யோசிக்க வேண்டும். தமிழ் நாட்டின் மிக முக்கியமான பாசன குடிநீர் ஆதாரமான காவிரியை பாது காக்கவும், காவிரி மீதான நம்முடைய உரிமைகளை காக்கும் தமிழக அரசு அனைத்து கட்சி கூட்டத்தை நடத்திய ஆலோசனை பெற வேண்டும் என்றார் பேஷன் முகம்

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கர்நாடக அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர்

ஆர்ப்பாட்டத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செயலர் சின்னை பாண்டியன், மாவட்ட செயலாளர் சக்திவேல், சிபிஐ (எம் எல்) மாவட்ட செயலாளர் மாசிலாமணி ஆகியோர் தலைமை வகித்தனர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் சண்முகம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் வீரபாண்டியன் ,சிபிஐ (எம்எல்) மாநில நிலை குழு உறுப்பினர் சிம்சன், நாகை தொகுதி மக்களவை உறுப்பினர் செல்வராஜ், சட்டப்பேர வை உறுப்பினர் மாரிமுத்து, லதா ஆகியோர் கலந்து கொண்டனர்




பர்கூரில்

## விறுவிறுப்பாக நடைபெற்று வரும் பள்ளியை தூய்மைப்படுத்தும் பணிகள்

கிருஷ்ணகிரி, மே.31

பள்ளிகளுக்கு கோடை விடுமுறை நிறைவடையும் தருவாயில், மீண்டும் பள்ளியானது ஜூன் 4ஆம் தேதி துவங்க உள்ளதாக தமிழக பள்ளிக்கல்வித்துறை அறிவித்ததையடுத்து தமிழகம் முழுவதும் பள்ளிகளை சுத்தம் செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதனை எடுத்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமாரின் உத்தரவின்படி, திட்ட அலுவலர் திருமதி கவிதா, வழிகாட்டுதலின்படி, பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பள்ளிகளில் பர்கூர் வட்டார வளர்ச்சி அலுவலர் உமா சங்கர் மேற்பார்வையில் தூய்மைப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக இன்று குண்டியால்நத்தம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கழிவறை, வளாகம், மற்றும்வகுப்பறைகளைசுத்தம்செய்யும் பணி நடைபெற்றது. மேலும் பழைய பழுதடைந்த கட்டடங்களை மீண்டும் புதுப்பிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. இதனை பர்கூர் வட்டார வளர்ச்சி அலுவலர் உமாசங்கர் மற்றும் சமூக நுகர்வோர் சங்க மாநில பொதுச் செயலாளர் சந்திரமோகன், ஆகியோர் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆலோசனை வழங்கினார்கள். அப்போது துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கோவிந்தராஜன், ஒப்பத்த வாடி ஊராட்சி செயலாளர் ஆனந்தன் ஆகியோர் உடன் இருந்தனர்.



தருமபுரியில்

## மாநில சட்ட தூண்கள் அறக்கட்டளையின் சார்பில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்

தருமபுரி மே 31

தருமபுரியில் மாநில சட்ட தூண்கள் அறக்கட்டளையின் சார்பில் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நிறுவனத் தலைவர் எஸ். குணசேகரன் தலைமையில் தருமபுரி மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது..இந்த கூட்டத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்த்தல் மற்றும் சட்ட தூண்கள் அறக்கட்டளை சார்பில் செய்யப்பட்டு வரும் பணிகளை குறித்து பொதுமக்களுக்கு எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்கள்.இதில்அறங்காவலர்கள் முத்து, அருள், குமரவேல், மாநிலச் செயலாளர் மணி, மாநில பொருளாளர் காவேரி, தருமபுரி மாவட்ட தலைவர் பி. கே. சிவா,மாவட்ட செயலாளர்நாகராஜ், இளைஞர் அணி செயலாளர் கணேஷ், விவசாய அணி தலைவர் முனிராஜ், துணைச் செயலாளர் ரோஹித் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



பர்கூர் ஒன்றியம் கணமூர் கிராமத்தில்

## ஸ்ரீலட்சுமி நரசிம்ம சுவாமிக்கு திருக்கல்யாண உற்சவம் சிறப்பாக நடைபெற்றது

கிருஷ்ணகிரி, மே.31

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் தொகுதிக்குட்பட்ட கனமூர் கிராமத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீலட்சுமி நரசிம்மர்சுவாமி ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தின் மூலவரான லட்சுமி நரசிம்ம சுவாமிக்கு திருக்கல்யாணம் ஒப்பத்தவாடி செல்வராஜ் கவுண்டர், ராஜலட்சுமி குடும்பத்தினர் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. அதிகாலை முதல் யாகங்களும், சிறப்பு பூஜைகளும் நடைபெற்றது. பத்துக்கும் மேற்பட்ட ஜீயர்கள் வேத மந்திரம் முழங்க, வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மண மேடையில், மேள தாளங்கள் முழங்க லட்சுமி நரசிம்மர் சுவாமி திருக்கல்யாண நடைபெற்றது. இந்த திருக்கல்யாண உற்சவ நிகழ்ச்சியில் கணமூர், பர்கூர், கிருஷ்ணகிரி, நாட்றம்பள்ளி, ஒப்பத்தவாடி, பகுதியை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் சுவாமிக்கு வாசனை திரவியங்களால் அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டன. இந்த கல்யாண உற்சவ நிகழ்ச்சியை விக்ரம், சுருதி, ஆர்யன், அத்விக், ஆனந்த், திவ்யா, ஆதியா, உள்ளிட்டோர் சிறப்பாக செய்திருந்தனர். நிகழ்ச்சியின் இறுதியாக சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. ஒப்பத்தவாடி கணமூர் ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் ஆலய வளாகங்கள் முழுவதும் தோரணங்கள் மற்றும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது பொதுமக்களை வெகுவாக கவர்ந்தன.

## கோவை வானவில் கூட்டமைப்பு சார்பில் செய்தியாளர் சந்திப்பு



கோவை மே:31

கோவை ஆடிஸ் வீதியில் உள்ள செய்தியாளர் மன்றத்தில் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் சிவக்குமார் கூறியதாவது, எல்ஜி பிடிகியூஐஎ+ தனிநபர்களின் உரிமைகளைக் கொண்டாடவும், பெருக்கவும் மற்றும் வழுபடுத்தவும் ஜூன் மாதம் உலகம் முழுவதும் சுயமரியாதை மாதமாக அங்கீகரிக்கப்படுகிறது.

லெஸ்பியன், கே, பைசெக்சுவல், டிரான்ஸ், குயர், இன்டர்செக்ஸ், ஆரோ/ஏஸ் தனிநபர்கள் பாலினம் மற்றும் பாலிர்ப்பு அடிப்படையிலான சிறுபான்மைக் குழுவைச் சேர்ந்தவர்கள், அவர்கள் பெரும்பான்மை சமூகத்தில் இருந்து தொடர்ந்து பல்வேறு வகையான பாகுபாடுகளை எதிர்கொள்கின்றனர், மேலும் இந்த சுயமரியாதை மாத நிகழ்வுகள் மூலம் பாலினம் மற்றும் பாலுணர்வை உள்ளடக்கியஉரையாடல்களைஉருவாக்கஉத்தேசித்துள்ளோம்.

கோவை வானவில் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இந்த சுயமரியாதை மாதத்திற்கான பதிவுகளில் பின்வரும் கோரிக்கைகளை வைக்கிறோம்.

கொள்கை மற்றும் சட்டக் கட்டமைப்பு,2024இல் வரைவு செய்யப்பட்ட எல்ஜி பிடிகியூஐஎ+ மாநிலக்கொள்கையை இறுதி செய்ய வலியுறுத்துதல். இது திருநர்கள் மட்டுமின்றி தன்பால் ஈர்ப்பாளர்கள் இருபாலீர்ப்பாளர்கள் மற்றும் பால் புதுமையினர் நபர்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டுகிறோம். மேலும் 'திருநங்கைகள் நல வாரியத்தின்' பெயரை மேலும் உள்ளடக்கியதாக (உதாரணமாக: இடைப்பால் மற்றும் திருநம்பிகளை உள்ளடக்கி) மாற்றுவதுடன், அதில் பல்வேறு தரப்புப் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கும் பரிந்துரைக்கிறோம் என்று கூறினார்.

காவல் நிலையம் அருகே

## கட்டிட தொழிலாளி அடித்து கொலை: மதுபோதையில் நண்பர் வெறிச்செயல்

தூத்துக்குடி, மே. 31

தூத்துக்குடி மாவட்டம் நாசரேத் அருகே உள்ள வகுத்தான்குப்பத்தைச் சேர்ந்த செல்வராஜ் மகன் ராஜா (வயது 41). இவரும், நாசரேத் பகுதியைச் சேர்ந்த முருகன் மகன் பாஸ்கர்(37) என்பவரும் நெருங்கிய நண்பர்கள். கட்டிடத் தொழிலாளிகளான இவர்கள் இருவருமே ஒன்றாக வேலைக்குச் சென்று வந்துள்ளனர். இவர்களுக்கு மது அருந்தும் பழக்கமும் இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று நள்ளிரவில் நாசரேத் காவல் நிலையம் அருகே உள்ள ஒரு பகுதியில் இருவரும் ஒன்றாக அமர்ந்து மது அருந்திக் கொண்டிருந்தனர். அப்போது மதுபோதை அதிகமான நிலையில், இருவருக்கும் இடையே திடீரென வாக்குவாதம் ஏற்பட்டு, தகராறாக மாறியுள்ளது. இதில் ஆத்திரமடைந்த இருவரும் ஒருவரையொருவர் கைகளால் தாக்கி மோதிக்கொண்டனர். இதில் அதிக ஆத்திரமடைந்த பாஸ்கர், அருகில் கிடந்த மரக்கட்டையை எடுத்து ராஜாவை சரமாரியாகத் தாக்கினார். இதில் தலையில் பலத்த காயமடைந்த ராஜா, ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த பாஸ்கர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

இந்த கொலை சம்பவம் குறித்து தகவலறிந்த நாசரேத் போலீஸ் இன்ஸ்பெக்டர் வனசுந்தர் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். உயிரிழந்த ராஜாவின் உடலை மீட்டு உடற்கூறாய்விற்காக சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் குறித்து நாசரேத் போலீசார்வழக்குப்பதிவு செய்துதீவிரதேடுதல்வேட்டை நடத்தி,தப்பியோடியபாஸ்கரைசிலமணிநேரங்களிலேயே கைது செய்தனர். நாசரேத் காவல் நிலையம் அருகிலேயே குடிபோதையில் கட்டிடத் தொழிலாளி அடித்து கொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மதுபோதையில் தாயை வெட்டிய மகன்; துப்பாக்கியால் சுட்ட தந்தை



செங்கல்பட்டு, மே31

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் பேருந்து நிலையம் அருகே உள்ள மரகத பூங்கா அருகே நேற்று மாலை 6 மணிக்கு பூஞ்சேரி சேர்ந்த மகனுக்கும் தாய்க்கும் வாய்தகராறுஏற்பட்டுள்ளது.அப்பொழுதுமதுபோதையில் இருந்த 25 வயது மகன் கேப்டன் பிரபாகரன் தன்னுடைய தாயாரான மாலாவை குடும்ப தகராறு காரணமாக ஆத்திரத்தில் கத்தியால் வெட்டியுள்ளார். இதனால் மாலாவுக்கு இடது கை மணிக்கட்டு அருகே காயம் ஏற்பட்டுசெங்கல்பட்டுஅரசுமருத்துவமனையில்சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையிலே இன்று அதிகாலை சுமார் இரண்டு மணி அளவில் பூஞ்சேரியில் உள்ள தனது வீட்டில் இருந்த போது தந்தை சேகர் என்பவர் மகன் கேப்டன் பிரபாகரனை ஏன் தாயை கத்தியால் வெட்டினாய் என்று கேட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார.

இந்தவாக்குவாதமானதுகைகலப்பாகமாறியநிலையில், வீட்டில் வைத்திருந்த அதாவது கொக்கு சுடுவதற்கு பயன்படுத்தப்படும் நாட்டு துப்பாக்கியை எடுத்து வந்து மகனை நோக்கி சுட்டதில் பிரபாகரனுக்கு இரண்டு கால் முட்டிக்கு கீழே காயம் ஏற்பட்டு சுரண்டு விழுந்துள்ளார். இதுகுறித்து தகவல் அறிந்து வந்த மாமல்லபுரம் போலீசார் துப்பாக்கிசூட்டினால்காயமடைந்தகேப்டன்பிரபாகரனை மீட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.தற்போது அவருக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மகனை துப்பாக்கியால் சுட்ட சேகரை மாமல்லபுரம் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்தப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கோவையில்

## மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்




கோவை மே:31

கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஒன்றிய அரசு முதல் கட்டமாக தமிழ்நாட்டில் உள்ள சிபிஎஸ்சி பள்ளிகளில் மூன்று மொழிகள் கட்டாயம் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது

இரு மொழிக் கொள்கையை கடைபிடிக்கும் தமிழ்நாட்டில் மூன்று மொழிகளை கட்டாயமாக திணிக்கும் மத்திய அரசின் அராஜகம் இந்தியாவின் அடிப்படை மக்கள் உரிமைக்கு எதிரானதாகும்.

தமிழ் மற்றும் ஆங்கிலம் என்ற இரு மொழி கொள்கை உடன் தமிழக பாடத் திட்டத்துடன் பள்ளிகளை மேம்படுத்த மத்திய அரசு நிதி தருமானால் அதனை ஏற்றுக் கொள்ளலாம் ஆனால் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வளர்ச்சி விட மத்திய அரசின் மொழி கொள்கை உட்பட கலாச்சார திணிப்பே இதில் பிரதான நோக்கமாக இருக்கிறது

தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படை அம்சமே ஐந்தாம் வகுப்பு வரை தாய் மொழி வழி கல்விதான் ஆனால் இதுவரை ஒரு சிபிஎஸ்சி பள்ளிகளில் கூட தாய் மொழி வழி கல்வி தொடங்கப்படவில்லை இதற்காக மத்திய அரசு எந்த தீவிர நடவடிக்கையும் எடுக்கவில்லை

ஆனால் இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிக்கும் வகையில் மும்மொழி கொள்கையை அவசர அவசரமாக திணிப்பது எதற்காக?

வட மாநில மாணவர்களால் இரண்டு மொழிகள் கூட அவர்களால் கற்றுக் கொள்ள இயலவில்லை இந்த நிலையில் வட மாநில மாணவர்களுக்கும் மொழிப் பாடங்கள் ஒரு பெரிய சுமையை ஏற்படுத்தும். பி எம் ஸ்ரீ திட்டம் என்பது மாணவர்களுக்கான கல்வி வளர்ச்சிக்கான திட்டமல்ல அது இந்தி மற்றும் சமஸ்கிருதத்தை திணிப்பதற்கு கொண்டு வரப்பட்ட நயவஞ்சக திட்டம்.

தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தின் கீழ் அதிகபட்சம் 800 பள்ளிகளில் இதனை அமல்படுத்த முடியும் அப்போது ஒரு பள்ளிக்கு அதிகபட்ச தொகையாக 30 லட்சம் மட்டுமே கிடைக்கும் இதில் ஒரு கழிப்பறை மட்டுமே கட்ட முடியும்

மிகக்குறைந்த அளவில் நிதியை கொடுத்து தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த கல்வி அமைப்பையே தனது நோக்கத்திற்கு கையகப்படுத்துகின்ற நயவஞ்சக திட்டம்தான் பி எம் ஸ்ரீ திட்டம்

நிதி அதிகமாக ஒதுக்குவது குறித்து எந்த அறிவிப்பும் இல்லாமல் மொழியை திணிப்பதற்கு இவ்வளவு அவசரம் ஏன்

மத்திய அரசின் கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மொத்த செலவினம் 50 லட்சம் கோடி என்ற நிலையில் கல்விக்காக 1.28 லட்சம் கோடி மட்டுமே மத்திய அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது இது மொத்த பட்ஜெட்டில் 2.5 சதவீதம் மட்டுமே

ஆனால் கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசின் மொத்த செலவினம் 4.39 லட்சம் கோடி என்ற நிலையிலும் 56,000 கோடியை கல்விக்காக ஒதுக்கியது தமிழக அரசு இது மொத்த பட்ஜெட்டில் 13 சதவீதமாகும்

ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசை விட மிக மிகக் குறைந்த அளவு கல்விக்கு நிதி ஒதுக்கிவிட்டு கல்வி வளர்ச்சியில் அக்கறை உள்ளது போல பேசுவது மக்களை முட்டாளாக்குவதாகும்.

அதனால் மும்மொழி திணிப்பையும் பி எம் ஸ்ரீ திட்டத்தையும் மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் கடுமையாக எதிர்க்கிறது

தமிழகத்தில் மட்டுமில்லாமல் இந்தியா முழுவதும் உள்ள மாணவர் சமூகத்தின் அறிவுத்திறனை குறைக்கும் தேசிய கல்விக் கொள்கையையும் பி எம் ஸ்ரீ திட்டத்தையும் மக்களிடம் அம்பலப்படுத்துவது எங்களது நோக்கமாகும்

தேசிய கல்விக் கொள்கையையும் பி எம் ஸ்ரீ திட்டத்தையும் தமிழ்நாட்டு மக்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள் என்பதை ஒன்றிய அரசிற்கு வலிமையாக தெரிவிக்க இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## குதிரை பேரம் நடத்தியது எடப்பாடி பழனிசாமிதான்: அமைச்சர் செங்கோட்டையன்

ஈரோடு, மே. 31

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் அமைச்சர் செங்கோட்டையன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

கட்சி தொடங்கிய இரண்டு ஆண்டுகளில் 38 சதவீதம் வாக்குகளை பெற்று தமிழ்நாட்டின் முதல்அமைச்சராக ஜோசப் விஜய் இருக்கிறார். தமிழகத்தைப் பொறுத்தவரை மக்கள் விரும்பும் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குதிரை பேர ஆட்சி நடைபெறுவதாக கூறுகிறார்கள். முதலில் குதிரை பேரத்தை நடத்தியது யார்? திமுகவுடன் கூட்டணி அமைத்து முதல்அமைச்சர் ஆகிவிடலாம் என்ற எண்ணத்தில் பேசியது யார்?. எம்ஜிஆர், ஜெயலலிதா பொதுச்செயலாளர் ஆக இருந்த காலத்திலும் அதிமுகவும் திமுகவும் கூட்டணி அமைத்ததே இல்லை. ஜெயலலிதா மீது வழக்கு போட்டு அவரை சிறையில் அடைத்தது திமுக. இதையெல்லாம் மறந்துவிட்டு திமுகவுடன் கூட்டணி அமைக்க துடித்து குதிரை பேரம் நடத்தியது எடப்பாடி பழனிசாமி தான் என்பதை நாடறியும். திமுகவுடன் கூட்டணி சேர்ந்து முதல் அமைச்சர் ஆகிவிட வேண்டும் என்று கருதிய எடப்பாடி பழனிசாமி அதிமுகவை சேர்ந்தவர் தானா? என்ற சந்தேகம் எழுகிறது. எனவே குதிரை பேரத்தில் யார் ஈடுபட்டார்கள் என்ற உண்மையை தமிழக மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் பெருந்துறை எம்எல்ஏவாக இருந்த ஜெயகுமார் போன்றவர்கள் தங்கள் பதவியை ராஜினாமாசெய்யஎன்னகாரணம்?.திமுகவுடன் அதிமுக கூட்டணி சேர விரும்பியதுதான் அவர்கள் தங்களது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்ய முதல் காரணம். எங்களைப் பொறுத்தவரை குதிரை பேரம் நடத்த வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. ஏனென்றால் தனித்து நின்று பணநாயகத்தை வீழ்த்தி ஜனநாயகத்தை வெற்றி பெற செய்தது தவெக. அதிமுகவில் சிலர் குதிரை பேர ஆட்சி, லாட்டரி பேர ஆட்சி என்று கூறுகிறார்கள்.

இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டியது சட்டமன்றம். நான், விஜய் பாலாஜி உள்ளிட்ட எம்எல்ஏக்கள் சட்டமன்றத்தில் இதற்கானபதிலை கூறுவோம். இனிவரும் காலங்களில் மக்களுக்கு தேவையான அனைத்து நல்ல திட்டங்களையும் இந்த மாவட்டத்தின் இரு அமைச்சர்களும் மக்களுடன் இணைந்து பணிகளை செய்து முடிப்போம். மேகதாதுவில் அணை கட்டுவது குறித்து தமிழக அரசின் ஆட்சேபனையை மத்திய அரசிடம் முதல்அமைச்சர் விஜய் தெரிவித்துள்ளார். இவ்வாறு அவர் கூறினார்.

## பொக்லைன் ஆபரேட்டரை தாக்கிய தவெக பிரமுகர் கட்சியிலிருந்து நீக்கம்



சென்னை, மே. 31

செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூரில் பணம் கேட்டு பொக்லைன் ஓட்டுநர் அழகுதுரை மீது தவெக நிர்வாகி ஜெய்கிருஷ்ணன் தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது. இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்கள் வேகமாக பரவியது. இதனையடுத்து அவர் தவெகவில் இருந்து நீக்கம் செய்யப்பட்டார்.

செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர் பொறுப்பில் இருந்தும் ஜெய்கிருஷ்ணன் நீக்கப்பட்டுள்ளார். பழைய வீட்டை இடித்து கட்டுமான பொருட்களை இடம் மாற்றியவர் மீது தாக்குதல் என புகார் அளிக்கப்பட்டுள்ளது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.